**‘இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 15.12.2021–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : **14.12.2021** இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

**(1)** இந்நகராட்சியின் வருவாய் நிதியின் General Enviro Tech (P) Ltd., கோயமுத்தூர் நிறுவனத்தினருக்கு எரிவாயு தகன மேடை அமைந்துள்ள பிறப்பணிகளுக்கு வைப்புத் தொகை ரூ. **186750/–** செலுத்தப்பட்டுள்ளது. கீழ்கண்டுள்ளவாறு வைப்புத் தொகை உள்ள விவரம்.

| வருடம் | ப.எண். | தொடர் எண். | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 2015–16 | 27 | 91 | 3750/– |
| 2016–17 | 31 | 16 | 3000/– |
| 2017–18 | 34 | 6 | 180000/– |
| | | மொத்தம் : | **186750/–** |

மேற்படி காலங்கடந்த வைப்புத் தொகையினை வழங்க மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(5243/20/பி2)

**தீர்மானம் எண். 1181**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**(2)** இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கையாக 55 DBC பணியாளர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண். | பெயர் | தினசரி 5 மணி நேரம் பணி மேற்கொள்ள |
|---|---|---|
| 1 | ரெயின்போ மகளிர் குழு, 13, மில் சந்து, சுவாமி சிவானந்தா சாலை, இராசிபுரம் – 637 408 | ரூ. 200/– |
| 2 | பாபாஜி மகளிர் குழு, 1, நடுகாலனி, சுவாமி சிவானந்தா சாலை, இராசிபுரம் – 637 408 | ரூ. 200/– |
| 3 | ஓம் சக்தி மகளிர் குழு, 41, வி. நகர் ரோடு எண். 10, இராசிபுரம் – 637 408 | ரூ. 220/– |
| 4 | பராசக்தி மகளிர் குழு, 2, வி. நகர் ரோடு எண். 9, இராசிபுரம் – 637 408 | ரூ. 230/– |
| 5 | கற்பக விநாயகம் மகளிர் குழு, 6/36, நடுகாலனி தெரு, இராசிபுரம் – 637 408 | ரூ. 220/– |
| 6 | செல்லியம்மன் மகளிர் குழு, 15, நடுகாலனி தெரு, இராசிபுரம் – 637 408 | ரூ. 230/– |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள (1) ரெயின்போ மகளிர் குழு (2) பாபாஜி மகளிர் குழு விலைப்புள்ளிகளை ஏற்று தலா 23, 22 DBC பணியாளர்கள் மூலம் பணி மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள (1) ரெயின்போ மகளிர் குழு (2) பாபாஜி மகளிர் குழு விலைப்புள்ளிகளை ஏற்று தலா முறையே 22, 23 DBC பணியாளர்கள் மூலம் கொசுப் புழு பணி மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(1550/18/எச்1)

**தீர்மானம் எண். 1182**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(3) இராசிபுரம் நகராட்சி சி.பி. கன்னையா தெரு கால்வாய் மேற்பகுதியில் தூர்வார வசதியாக இரும்பிலான மூடிகள் அமைக்கும் ரூ. 450000/– மதிப்பீட்டுப் பணிக்கு 11.11.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு ஆர். பெரியசாமி, ஒப்பந்ததாரர், மசக்காளிப்பட்டி அஞ்சல்,
இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.18% குறைவு.
2) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், 27, வி.நகர் ரோடு எண். 17,
இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.01% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.18% குறைவான திரு ஆர். பெரியசாமி, ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.18% குறைவான திரு ஆர். பெரியசாமி, ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(3817/2021/இ1)

**தீர்மானம் எண். 1183**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(4) இந்நகராட்சிக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2020–21–இல் போலீஸ் லைன் குறுக்குத் தெரு, வள்ளலார் சாலை குறுக்குத் தெரு 1–5, சி.பி. கன்னையா குறுக்குத் தெரு 2, முருகேசன் தனபாக்கியம் மனைப்பிரிவு, மின்வாரிய அலுவலக குறுக்குத் தெரு 3, காந்தி நகர் பிரதான சாலை மற்றும் ரத்தினம் செட்டியார் மண்டப குறுக்குத் தெரு தார் சாலை அமைத்தல் பணிக்கு ரூ. 295.55 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 20543/2021/பி2, நாள் 16.11.2021–இல் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி பணி மேற்கொள்ள 08.12.2021 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் பின்வருமாறு :

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் விலாசம் | மதிப்பீடு | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|---|
| | | | குறைவு | அதிகம் |
| 1 | திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரர், 1–202, மசக்காளிப்பட்டி அஞ்சல், இராசிபுரம் | ரூ. 295.55 இலட்சம் | – | 4.90 % |
| 2 | திரு ஆர். பெரியசாமி, ஒப்பந்ததாரர், 82, மூலக்காடு, மசக்காளிப்பட்டி அஞ்சல், இராசிபுரம். | | – | 5.98 % |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண். 1—இல் உள்ள திரு ஆர். பிரகாசம், வ.எண். 2—இல் உள்ள திரு ஆர். பெரியசாமி, ஒப்பந்ததாரரைவிட குறைவாக அளித்துள்ளார். இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டைவிட அதிகமாக இருப்பதாலும், பணி மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளதாலும் திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரரிடம் விலைப்புள்ளி குறைத்துத்தர கடிதம் மூலம் கோரப்பட்டது. தார் உள்ளிட்ட கட்டுமானப் பொருட்கள் மற்றும் டீசல் விலையேற்றம் காரணமாக ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள அனைத்துப் பணிகளுக்கும் 4.90 % கூடுதலான விலை விகிதத்தில் இப்பணிகளை செய்து வழங்க ஒப்புக்கொள்கிறேன் என தெரிவித்து திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரர் 13.12.2021 அன்று கடிதம் வழங்கியுள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பாக இருந்தாலும், பொறியாளர் கையேடு பக்கம் எண். 9—இல் பிரிவு 2.7.2.—இல் 5% வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட திட்டப் பணியை விரைந்து முடிக்க வேண்டிய அவசியம் கருதி வ.எண். 1—இல் உள்ள ஒப்பந்ததாரரான திரு ஆர். பிரகாசம் மதிப்பீட்டை விட 4.90 % கூடுதலான விலை விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பாக இருந்தாலும் திட்டப் பணியை விரைந்து முடிக்க வேண்டிய அவசியம் கருதி திரு ஆர். பிரகாசம், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைவிட 4.90 % கூடுதலாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(3707/2021/இ1)

**தீர்மானம் எண். 1184**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

( 5 ) இராசிபுரம் நகராட்சி பேருந்து நிலைய வணிக வளாக கட்டடங்களில், தெற்கு பகுதி கட்டடத்தில் ஏற்கனவே உள்ள தாங்கு சுவர்மீது மேற்கூரை அமைக்க (Light roof – GI sheet) தரச்சான்று (Building Stability Certificate) ஆய்வு செய்து வழங்க அரசு பொறியியல் கல்லூரி, கருப்பூர் அவர்கள் அளித்துள்ள பட்டியல் ரூ. 47200/— வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி பணியை செய்து முடித்ததற்கும், தொகை வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(3218/19/இ1)

**தீர்மானம் எண். 1185**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

( 6 ) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண். 31114/2021/அம்ருட்—2, நாள் 06.12.2021—இல் 15 ஆவது மத்திய நிதிக்குழு Tied Grant-இன்கீழ் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | மான்ய விவரம் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1 | Tied Grant (50% SWM) | நெகிழி துண்டாக்கி இயந்திரம் (Plastic Schredder), பெயிலிங் இயந்திரம் (Bailing machine), சல்லடை இயந்திரம் (Sieving machine) மற்றும் எடை பார்க்கும் இயந்திரம் (Weighing machine) விநியோகம் செய்து பொருத்துதல் | 8.85 |
| 2 | | வார்டு 23, தட்டான்குட்டை உரக்கிடங்கில் நுண்ணுயிர் உர மையத்தில் கூடுதல் பணிகள் மேற்கொள்ளுதல் | 20.00 |
| 3 | | குப்பைகளை துண்டாக்கி அறைக்கும் இயந்திரம் விநியோகம் செய்து பொருத்துதல் | 4.00 |
| | | **மொத்தம் :** | **32.85** |
| 4 | Tied Grant (50% WS) | இராசிபுரம் நகராட்சி வ.உ.சி. நகர் மேல்நிலைத் தொட்டியில் Horizontal split centrifugal pump விநியோகம் செய்து பொருத்துதல் | 35.00 |
| 5 | | நகராட்சிப் பகுதிகளிலுள்ள ஆழ்துளைக் கிணறு 2HP & 5 HP மின் விசைப் பம்புகளுக்கு பேனல் போர்டு மற்றும் கேபிள் விநியோகம் செய்தல் | 8.15 |
| | | **மொத்தம் :** | **43.15** |
| | | **மொத்தம் (SWM மற்றும் WS) :** | **76.00** |

15-ஆவது மத்திய நிதிக்குழு (Tied Grant) மான்ய நிதியின் கீழ் ரூ. 76.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்குமாறு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண். 31114/2021/அம்ருட்–2, நாள் 06.12.2021–இல் தெரிவித்துள்ள பணிகளை 15–ஆவது மத்திய நிதிக்குழு (Tied Grant) மான்ய நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.

(4303/21/இ2)

**தீர்மானம் எண். 1186**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சியில் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் முத்துக்காளிப்பட்டி தகன மேடையில் பிரதான மற்றும் குறுக்கு சாலைகளில் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கவும், வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் இறுதிச் சடங்கு கொட்டகை அமைக்கவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 36.75 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. இத்திட்டப் பணிக்கு ராசி ரோட்டரி பவுன்டேசன் டிரஸ்ட் நிறுவனம் 33 1/3 % பங்கினை பகிர்ந்து கொள்ள ஒப்புதல் தெரிவித்து முதற்கட்டமாக ரூ. 100000/– செலுத்தியுள்ளனர். எனவே, ரூ. 36.75 இலட்சம் மதிப்பீட்டில் முத்துக்காளிப்பட்டி தகன மேடையில் அடிப்படை வசதிகள் மேற்க்கொள்ளும் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது அனுமதி பெற முன்மொழிவுகள் அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** ரூ. 36.75 இலட்ச மதிப்பீட்டில் தகன மேடை அடிப்படை வசதிகள் மேற்க்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

(3877/21/இ1)

**தீர்மானம் எண். 1187**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(8) அரசாணை (நிலை) எண்.2 நகராட்சி நிர்வாகம் மற□றும் குடிநீர் வழங்கல□ (MA2) துறை, நாள□ **07.01.2021** வாயிலாக இராசிபுரம் நகராட்சியில□ தமிழ□நாடு நீடித்த நகர மேம்பாட்டுத் திட்டம் (Tamil Nadu Sustainable Urban Development Project) இன்கீழ் ரூ. **12.00** கோடி மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள□ளது. மேற□கண்ட திட்டத்திற□கு உலக வங்கி நிதி உதவியுடன□ TNSUDP திட்டத்தின□கீழ□ TNUDF மூலமாக மான்யத் தொகையாக ரூ. **6.80** கோடி வழங்க கீழ□கண்ட நிபந்தனைகள□ TNUIFSL சென்னை நிறுவனத்தின் மூலமாக விதிக்கப்பட்டுள□ளது.

**Terms and Conditions**

1) **Amount of Grant :** Rs. 6.80 Crores (Rupees Six Crores and Eighty Lakhs only)
2) **Project :** Road improvement sub-project in Rasipuram Municipality
3) **Project Cost :** Rs. 12.00 Crores
4) **Financing Plan :**

| Sl. No. | Means of Finance | Amount (Rs. in Crores) |
|---|---|---|
| 1 | Term Loan from TNUDF under World Bank assisted TNSUDP | 2.96 |
| 2 | Grant from Project Sustainability Grant fund (PSGF) under World Bank assisted TNSUDP | 6.80 |
| 3 | ULB Contribution | 2.24 |
| | **Total Project Cost** | **12.00** |

5) **Completion Period :**

The Proposed Project Should be completed within one year from the date of commencement of project.

6) **Last date of withdrawal :**

Unless TNUIFSL otherwise agrees in writing, the right to make withdrawals from the Grant shall cease on completion of three years from the date of execution of the Grant Agreement.

7) **Special terms &conditions :**

a) **Procurement Guidelines :**

The ULB shall adhere to the provisions / guidelines of International Bank for Reconstruction and Development for procurement of works, goods and services. The ULB shall obtain approval for contract packaging, bid documents, bid evaluation reports and other reports & documents as applicable from the TNUIFSL.

b) **Statement of Expenditure & Progress Report :**

The ULB shall provide monthly Progress Reports and Statement of Expenditure (SoE) during implementation in the format prescribed by TNUIFSL.

c) **Environmental & Social Framework :**

The ULB shall implement the Project according to the Environmental and Social Management Framework (ESMF) prescribed by TNUIFSL.

மேற்கண்ட நிபந்தனைகளின்பேரில் இராசிபுரம் நகராட்சியில் தமிழ்நாடு நீடித்த நகர மேம்பாட்டுத் திட்டம் (TamilNadu Sustainable Urban Development Project) இன்கீழ் ரூ. 12.00 கோடி மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளTNUDF மூலமாக ரூ. 6.80 கோடி மான்யமாக தொகை பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மேற்கண்ட நிபந்தனைகளை ஏற்று TNUDF மூலமாக மான்யத் தொகை ரூ. 6.80 கோடி பெற மன்றம் அனுமதிக்கலாம்.

(1335/20/இ1)

**தீர்மானம் எண். 1188**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– ர. அசோக்குமார்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.